

FREE EDITION

October - 2016

# ஜோதி

Jothi
Spiritual Newsletter

ஜோதி 10 : சுடர் 08 - 116

ஆன்மிகச் செய்திச்சுடர்

## மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

## நவராத்திரி கொலுவின் தத்துவம்

நவராத்திரி கொலுவைப் பராசக்தியின் “விஸ்வரூப தரிசனம்” என்று கூறலாம். “எல்லாமாக இருப்பவள் நானே”என்பதைப் பராசக்தி அந்தக் கொலு பொம்மைகள் வாயிலாக உணர்த்துகிறாள்.

| | |
|---|---|
| 9ஆம் படி | **பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகள் அவர்கள் தம் தேவியர்களான சரஸ்வதி, இலட்சுமி, பார்வதி சகிதம் இருத்தல்<br><br>ஆதிபராசக்தி நடுநாயகமாக இருத்தல் வேண்டும்** |
| 8ஆம் படி | **தேவர்கள், நவக்கிரக அதிபதிகள், பஞ்சபூத தெய்வங்கள், அட்டதிக்கு பாலகர்கள்** |
| 7ஆம் படி | **மனிதனுக்கு மேற்பட்ட மகரிஷிகளின் பொம்மைகள்** |
| 6ஆம் படி | **ஆறறிவு படைத்த உயர்ந்த மனிதர்களின் பொம்மைகள்** |
| 5ஆம் படி | **ஐயறிவு கொண்ட பறவைகள், நாற்கால் விலங்குகள்** |
| 4ஆம் படி | **நான்கறிவு கொண்ட உயிர்கள்– நண்டு,வண்டு** |
| 3ஆம் படி | **மூவறிவு கொண்ட உயிர்கள் சிப்பி எறும்பு** |
| 2ஆம் படி | **ஈறறிவு கொண்ட உயிர்கள் நத்தை, சங்கு என்பன.** |
| 1ஆம் படி | **ஓரறிவு கொண்ட புல், செடி, கொடி, தாவரம்** |

## “அம்மாவின் அருளிச்செயல்”

**உ**லகெலாம் போற்றும் அன்னையின் திருவுருவாம் அருள்திரு அம்மாவின் பொற்பாத கமலங்களுக்கு வணக்கம் பல கோடி! எண்பத்தைந்துகளில் நான் மருவத்தூர் திசையறியாத கால கட்டம்! எளியேனையும் தடுத்து ஆட்கொண்டருளிய பொற்காலம்! அந்த நிகழ்வுகளை செவ்வாடைத் தொண்டர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் அகமகிழ்வு எய்துகிறேன்.

பேராசிரியர், முனைவர். **இரா.கண்ணன்** M.A. Ph.D.
திருபுவனம்

மனித உடலை ஸ்தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம் எனப்பகுத்துக்கூறுவர் சான்றோர். ஸ்தூல சரீரம் உறங்கும்போது சூக்கும உடல் எங்கும் பயணம் செய்ய வல்லது.
ஒருநாள் உறங்கிக்கொண்டிருந்தேன். அப்பொழுது, ஒரு சிறிய ஆலயம்(இப்போது சித்தர் பீடம்) அங்கே கையில் வேப்பிலைக் கொத்துடன் செவ்வாடை வேட்டியணிந்து பெண்போல நடந்து சென்று புற்றுக்கு அருகில் எழுந்தருளினார் அருள்திரு அடிகளார்.
உறங்கிக்கொண்டிருந்த என்னைப் பார்த்து எழுந்து வா மகனே! என்றார். உடனே எனது சூக்கும உடல் எழுந்து அவர் அருகே சென்று அமர்ந்தது.
அம்மா கூறிய பல விஷயங்களில் ஒரு சிலவற்றை மட்டும் எழுதுகிறேன்.

### தண்ணீரும் உப்பும்:

“மகனே! தண்ணீருடன் உப்பு சேர்ந்தாலும், உப்புடன் தண்ணீர் சேர்ந்தாலும் முடிவில் இரண்டும் ஒன்றாகக் கலந்து விடுகின்றன. அதுபோல உன்னோடு நான் சேர்ந்தாலும், அல்லது என்னோடு நீ சேர்ந்தாலும் நாம் ஐக்கியம் ஆகிவிடுகின்றோம். நீ என்னை வந்து சேர்வதற்கு முன்னர் இன்று நான் உன்னோடு சேர்ந்துவிட்டேன்”.

### பஞ்சும் நெருப்பும்:

“மகனே! பஞ்சானது தொலைதூரத்தில் இருக்கும் வரை பாதுகாப்பாக இருக்கிறது. ஆனால் அது நெருப்பை நோக்கி வரவர நெருப்பில் பட்டுக் கருகி விடுகிறது. அதுபோல தொலைதூரத்தில் இருந்துகொண்டு, நீ நினைக்கும் தீய எண்ணங்கள், நீ சொல்லும் தீய சொற்கள், நீ செய்யும் தீய செயல்கள் யாவும் என்னை வந்தடையும் பொழுது அவை பொடிபொடியாகின்றன”.

### பல்லியின் வால் போல ஆணவம்:

“மகனே! பல்லியினுடைய வால் துண்டிக்கப்பட்டுக் கீழே விழுந்தாலும் மீண்டும் அதற்கு வால் முளைத்து விடுகிறது. அதுபோல உன்னுடைய ஆணவம் என்ற வால் வெட்டப்பட்டாலும், மீண்டும் வளர்ந்துவிடுகிறது”.
(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“நீங்கள் நினைத்ததைச் செயல்படுத்தவும் என் அருள் வேண்டும்.”**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினூடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Newsletter"**


## செய்திச்சுடரில்...


அம்மாவின் அருளிச்செயல் — Page: 1 – 5

"ஒரு வீடு வாங்கு" — Page: 11

**UPCOMING EVENTS**
Melbourne: 9, 10, 14
Sydney: 6, 8

திருமதி அம்மா பதில்கள் — பக்கம்: 15

அருள்வாக்கும் அனுபவங்களும்... — பக்கம்: 7

Divine Miracles — Page: 12

சித்தர்பீட விழாக்கள் — பக்கம்: 7

ஆன்மிக நாட்குறிப்பு — பக்கம்: 16


# அம்மாவின் அருளிச்செயல்..

(முன்பக்க தொடர்ச்சி)

### இலந்தைப்பழம்: கொட்டையும், சதையும்:

"மகனே! இலந்தைப்பழம் பார்த்திருக்கிறாய் அல்லவா? அதில் கொட்டைப்பகுதி அதிகம். சதைப்பகுதி குறைவு. அதுபோல நாட்டிலே 'சுயநலம் என்ற கொட்டைப்பகுதி அதிகம். பொதுநலம் என்ற சதைப்பகுதி குறைவு! என்றுதான் நீ பன்னீர் திராட்சைப்பழமாக மாறப்போகிறாயோ..?"

### காட்டுப்பன்றிகளும் - ஆணவக்கொம்பும்:

"மகனே! சில பன்றிகளுக்குக் கொம்பைக் கொடுத்திருக்கிறேன். அது காட்டிலிலுள்ள கிழங்குகளைத் தோண்டியெடுத்துத் தின்பதற்காகக் கொடுக்கப்பட்டவை. ஆனால் அவையோ மலையையே தகர்க்க முயற்சி செய்கின்றன. அவற்றின் கொம்பின் உதவியால் கிழங்குகளைத் தோண்டி எடுக்காமல் மலையைப் பெயர்க்க முயல்கின்றன. அதுபோல சிலர் வந்த வேலையை விட்டுவிட்டுத் தங்களுடைய ஆணவக் கொம்பினால் ஆன்மிக மலை என்னும் சிரஞ்சீவி மலையைத் தகர்க்க முயல்கின்றனர். கொம்பை ஒடித்துக் கொள்ளும் வம்பு வேலையைச் செய்யாதீர்கள். ஆணவக் கொம்பைக் காம்போடு அறுப்பவள் நான்!".

### ஆயிரத்தெட்டு புவனங்களிலும் மன்றங்கள்:

"மகனே! இந்தப் பூமியில் மட்டும்தான் மன்றங்கள் என்று நினைக்காதே! ஆயிரத்தெட்டு புவனங்களிலும் மன்றங்கள் அமைத்திருக்கிறேன். ஆங்காங்கு உள்ள பக்குவப்பட்ட ஆன்மாக்கள் வழிபாடு செய்துகொண்டிருக்கின்றன. இந்த இரகசியத்தை முதன்முதலில் உங்களிடம்தான் சொல்கின்றேன். அங்கே என்னென்ன முறைகளில் வழிபாடு செய்யப்படுகிறதோ அதுவே உங்களுக்கும் அருளப்பட்டுள்ளது.

### புதுமையான அனுபவம்:

"மகனே! இன்று ஒரு புதுமையான அனுபவத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இதற்காக நீ எத்தனை கோடி ஆண்டுகள் தவம் இருந்தாய் என்பது எனக்குத் தெரியும்".

### ஆத்திகமும் - நாத்திகமும்:

"மகனே! நீ ஆத்திகம் பேசினாலும், நாத்திகம் பேசினாலும் எப்படி எப்படியெல்லாம் பேசுகின்றாயோ, அதற்கு ஏற்ற அறிவை நான்தான் உனக்குக் கொடுத்திருக்கிறேன் என்பதை மறந்துவிடாதே!"

### உன்னதமான பணிக்காக..

"மகனே! உன்னதமான பணிக்காகப் பாலகனை (அடிகளார்) அனுப்பியிருக்கிறேன். புரிந்துகொள்ள முயற்சி செய்!"

### மந்திரங்கள் பற்றி..

"மகனே! யுகம் யுகமாகச் சப்தங்களுக்கு வரி வடிவம் கொடுத்துக் கொண்டே இருக்கிறேன். அவரவர்களுக்குத் தேவையான வரி வடிவம் கொடுத்துக் கொண்டே இருக்கிறேன். இன்று உங்களுக்கு ஒரு நூலின் வடிவிலே மந்திர அலைகளைக் கொடுத்திருக்கிறேன். பயனடைந்துகொள்!"

### அறிவாளிகளும் வியாபாரிகளும்:

"மகனே! என்னுடைய திருவடியானது எங்கே முடிகிறதோ, அங்கேதான் என்னுடைய தொடக்கமும் ஆரம்பமாகின்றது.

"சிற்சில இடங்களில் அறிவாளிகளைச் சேர்க்கிறேன். அவர்கள் ஆராய்ச்சியில் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். சிற்சில இடங்களில் வியாபாரிகளைச் சேர்த்திருக்கிறேன். அவர்கள் ஆன்மிகத்தை வியாபாரம் ஆக்குகிறார்கள்.

(தொடர்ச்சி…3ஆம் பக்கம்)

# அம்மாவின் அருளிச்செயல்..

**பெண்களையும், வருங்காலத்தையும் காப்பாற்ற வேண்டியுள்ளது:**

"மகனே! தாய்ப்பால் கூடக் கலப்படமாகி வருகின்றது என்று நான் சொல்கிறேன்.
இன்று நாட்டில் கருவுற்ற பெண்கள் பார்க்கும் திரைப்படங்களும், கதைகள், இதர காட்சிகள் அனைத்துமே மிகவும் கீழ்த்தர சிந்தனை உடையதாகவும், ஆபாசங்கள் உடையதாகவும் தீய குணங்கள் உடையதாகவும் இருக்கின்றன.
இடைவிடாது ஒன்று மாற்றி ஒன்று பார்த்தும், கேட்டும், ருசித்தும், முகர்ந்தும், தீண்டியும் ஐம்புலன்கள் மூலமாக ஒவ்வொரு நிமிடமும் உலக நிகழ்ச்சிகள் கருவுற்ற பெண்ணின் மனத்திற்குள்ளே சென்று, அங்குள்ள குழந்தையையும் சென்றடைகின்றது.

இப்படிப்பட்ட சிந்தனைகளைச் சந்திக்கும் சூழ்நிலையில் பெண்கள் இருப்பதால் அவர்கள் எண்ணங்கள் பாதிக்கப்பட்டு அவர்கள் விஷத்தைத்தான் குழந்தைகட்குப் புகட்டுவதற்குக் கட்டாயமாகத் தள்ளப்படுகிறார்கள்.

சமுதாயத்தை மாறுதல் செய்ய வேண்டியிருக்கிறது. பெண்களையும் வருங்காலத்தையும் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. எனவே, பெண்களைக் காக்க வேண்டித்தான் இந்த திரு அவதாரம்!

நாளைய உலகம் அருள் உலகமடா! ஆன்மிக உலகமடா!"

**ஓம் சக்தியில் உள்ள சக்தி:**

"மகனே! ஒரு சிறிய ஆல வித்துக்குள் மாபெரும் ஆலமரத்தையே வைத்திருக்கிறேன் அதுபோல 'ஓம் சக்தி'என்ற வார்த்தைக்குள் அண்டங்களுடைய விளக்கங்களையெல்லாம் வைத்திருக்கிறேன்."

**தண்டனை நிச்சயம்:**

"மகனே! நான் எங்கோ இருப்பதாக நினைத்துக்கொண்டு நீ இங்கு தவறுகள் செய்துகொண்டு இருக்கிறாய். நான் உன் அருகில்தான் இருக்கிறேன் என்பதை மறந்து விடாதே!"
நீ ஒரு தவறு செய்தால் உனக்குள்ள சுதந்திரத்தைப் பயன்படுத்தித் திருத்திக்கொள். அதை மீறித் தவறு செய்தால் அதற்குரிய பலனை அப்பொழுதே தீர்மானித்து விடுகின்றேன். அனுபவிக்கக் கால தாமதம் ஆகலாம். ஆயினும் நீ தண்டனையை நிச்சயம் அனுபவித்தே தீர வேண்டும்".

**எந்த முயற்சியும் இல்லாமல் பலன் அடைகிறீர்கள்:**

"மகனே! பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பாக காடுகளிலும், குகைகளிலும் இருந்து முனிவர்களும், ஞானிகளும் தவத்தில் ஆழ்ந்திருந்து எனது அருளாற்றலைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அந்தச் சக்தியைப் பெறுவதற்கு எந்தவித முயற்சியும் இல்லாமலேயே அவர்களுடைய தவப் பயன்களையெல்லாம் நீங்கள் இப்போது பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். என்றும் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும்."

**உன்னைத்தேடி வைரச்சுரங்கம் வந்திருக்கிறது:**

"மகனே! இன்று நீங்கள் எல்லாம் புண்ணியம் செய்தவர்கள்! ஏனென்று கேட்டால் எந்தப் பகுதியிலே மகான்களோ, அருளாளர்களோ, ஜீவ சமாதி கைகூடுகின்றார்களோ அதற்கு மறுநாள் அருள் ஒலியானது (சப்தம்) உலகுக்கு வழங்கப்படும்.
இதனைப் பண்டைக்காலத்தில் குகைளில் தவம் செய்யும் முனிவர்களும், ஞானிகளுமே பெற்றுக் கொள்வார்கள். ஆனால் அதை இன்று உன்னிடம் மடை மாற்றம் செய்திருக்கிறேன்.
நீ முனிவனும் அல்ல, துறவியும் அல்ல, சாதாரணக் குடிமகன். உன்னைத்தேடி வைரச்சுரங்கம் வந்திருக்கிறது. வைரத்தை மதிப்பிடும் சக்தி உனக்கு உள்ளதா?"

(தொடர்ச்சி…4ஆம் பக்கம்)

புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்

ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த

www.adhiparasakthi.co.uk ஆதிபராசக்தி இணையத்தளம்

"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

# அம்மாவின் அருளிச்செயல்..

## மூளையை வளர்த்துக்கொள்:

“மகனே! உன்னுடைய கபாலத்திற்குள்ளே சதைப்பிண்டம் ஒன்று இருக்கிறது. அது இன்னும் சதைப்பிண்டம் என்ற தகுதியிலேதான் இருக்கிறது. அது மூளை என்ற பெயரை இன்னும் பெறவில்லை. அந்தத் தகுதியைப் பெற்றிந்தால் நீ எப்படி நடக்க வேண்டும் என்பதை அறிந்திருப்பாய். சதைப் பிண்டம் கட்டியாக விடாமல் பார்த்துக்கொள்! மூளையை வளர்த்துக்கொள்!”

## என்னை வழிபடுபவனுக்குத் துன்பம் ஏன்?

“மகனே! வாத்தினை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா? வாத்தினை மேய்ப்பவன் சாக்கடையில் மேய்ந்துகொண்டிருக்கும் அந்த வாத்தினைக் கழுத்தைப் பிடித்துத் தூக்கிக்கொண்டுபோவான். அவ்வாறு வாத்தின் கழுத்தை இறுக்கமாகப் பிடித்துச் செல்வதைப் பார்ப்பவர்களுக்கு மிகவும் வேதனையாகவும் பரிதாபமாகவும் இருக்கும். அவன் அந்த வாத்தினைக் குளத்தில் சென்று விட்டுவிடுவான். அது அங்கு நிம்மதியாக நீந்திக் கொண்டிருக்கும்.

அதுபோல சிலசமயங்களில் உன்னை நான் கழுத்துப்பிடியில் வைத்திருப்பேன். மிக இக்கட்டான துன்பப்பிடி போல இருக்கும். அது மற்றவர்கள் பார்வையில் நீ துன்பப்படுவது போலவும், என்னை வழிபட்டதால்தான் நான்தான் அப்படிப் பிடித்திருக்கிறேன் எனவும் மிக ஏளனமாகவும் மற்றவர்களின் பார்வைக்குப்படும்.

நான் உன்னை மனித சாக்கடையிலிருந்து பிடித்து இழுத்து என்னுடைய அருள் தடாகத்தில் விட்டு விடுவதற்காகத் தான் பிடித்துச் செல்கிறேன்”.

## ஆராய்ச்சியை விடு! அருட்கனியை உண்ணவா!:

“மகனே! பள்ளி செல்லும் குழந்தைகள் வீட்டில் புத்தகம் படிப்பதைக் கவனித்திருப்பாய்! அப்புத்தகத்தில், அம்மா, ஆடு என்று எழுதப்பட்டிருக்கும். அந்தக் குழந்தை அதையெல்லாம் படிக்கும்.

‘அம்மா!’என்றவுடன் அமுதமா ஊட்டுகிறாள்?
‘ஆடு’என்றவுடன் மேய்க்கவா முடிகிறது?
‘இலை’என்றவுடன் சாப்பிடவா முடிகிறது?
‘ஈ’என்றவுடன் விரட்டவா முடிகிறது?
‘உரல்’என்றவுடன் இடிக்கவா முடிகிறது?
‘ஊதல்’என்றவுடன் ஊதவா முடிகிறது?
‘எலி’என்றவுடன் பிடிக்கவா முடிகிறது?
‘ஏணி’என்றவுடன் ஏறவா முடிகிறது?
‘ஐவர்’என்றவுடன் பேசவா முடிகிறது?
‘சீப்பு’என்றவுடன் சீவவா முடிகிறது?
‘பழம்’என்றவுடன் உண்ணவா முடிகிறது?
‘தென்னைமரம்’என்றவுடன் தேங்காயா கிடைக்கிறது?
இவையெல்லாம் ஏட்டிலே இருக்கின்றன. அவற்றை அனுபவித்துப் பார்க்கும் போதுதான் வாழ்க்கை புலனாகும்.

அதுபோல என்னைப் பற்றி ஏராளம் ஏராளமான நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நீ படித்ததனால் அறிவு வளர்ந்ததாகக் கருதிக் கொண்டிருக்கிறாய்.

என்று உனது அறிவு அனுபவமாக மாறுகிறதோ, அனுபவம் அனுபூதியாக மாறுகிறதோ, அன்றுதான் என்னைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும்.

ஆராய்ச்சிகளை விட்டு விட்டு அருட்கனியை உண்ண வா!”

## பின்னோக்கிச் சென்று விட்டாய்:

“மகனே! உண்மையிலேயே நீ என்னுடைய நெறியைப் பின்பற்றியிருந்தால் எவ்வளவு செய்திகளை நான் தந்திருப்பேன்? முறையாகப் பயிலாததால் முறையாகக் கடைப்பிடிக்காததால் நீ 200 நூற்றாண்டுகள் பின் நோக்கிச் சென்று விட்டாய் என்பதை மறவாதே!”

## ஏன் ஆலயத்தில் அருள் அதிர்வுகள்:

“மகனே! உன்னை அடிக்கடி என் ஆலயத்திற்கு வரச் சொல்கிறேன். அங்கே என்னுடைய அருள் அதிர்வுகளை முறைப்படுத்தி வைத்திருக்கின்றேன். நீ அங்கு வந்தவுடன் உன் பாவங்கள் போக்கப்படுகின்றன.”

(தொடர்ச்சி..5ஆம் பக்கம்)

# அம்மாவின் அருளிச்செயல்..

## பிரபஞ்ச ரகசியங்கள் தெரிய வேண்டுமா?

“மகனே! தந்திக் கம்பி மேல் உட்கார்ந்திருக்கும் பறவைகட்கு அந்தக் கம்பி வழியே செல்லும் செய்தி என்ன என்று தெரியாது. அதுபோல என் மீது அமர்ந்திருக்கும் உங்களுக்கு என் மூலமகாச் செல்லும் செய்திகள் தெரியாது.

உங்களுடைய அறியாமைக்காக இதைச் சொல்கிறேன்.

பறவைகள் செய்திகளைத் தெரிந்து கொள்ள முடியாமல் போகலாம். ஆனால், நீங்கள் மனது வைத்தால் அந்த ரகசியங்கள் உங்களுக்குத் தெரியவரும்.

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தொலைபேசிச் செய்தி சென்று கொண்டிருக்கும். ஆனால், இடையில் ஏதோ ஒரு கம்பத்தின் மீது ஏறிக்கொண்டு ஒரு சாதனத்தின் துணையுடன் ஒரு மனிதன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.
அதுபோல, பிரபஞ்ச இரகசியங்களை உரிய சாதனத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ள முயற்சி செய்!”

## வௌவாலும் - நீங்களும்:

“மகனே! வௌவாலை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா? அது எந்த வழியால் உணவை உட்கொள்கிறதோ, அந்த வழியாலேயே கழிவுகளை வெளியேற்றுகின்றது. வௌவாலுக்கு அதுதான் இயற்கை.
ஆனால் நீ ஏன் வௌவாலைப் பின்பற்றுகிறாய்? மந்திரங்களை உண்ணும் உனது வாய் நன்மைகளைப் பேசும் அந்த வாய் தீயனவற்றையும் ஏன் வெளித்தள்ளுகிறது? உனது பழக்கத்தை மாற்றிக்கொள்!

## படிப்பதால் என்ன பயன்:

“மகனே! உயரிய கருத்துகளைச் சிலர் படிப்பதைக் கவனித்திருப்பாய். அவர்கள் வேகமாகப் படித்து முடித்து விடுவார்கள். அக்கருத்தில் ஏதாவது ஒன்றை மட்டும் பின்பற்ற முயற்சி செய்தால் வாழ்வானது உயருகின்றது. படிக்கும் வேகத்தைச் செயல் திறனில் காட்டு! வாழ்க்கையிலே பின்பற்ற முயற்சி செய்.

காலம் காலமாகக் கொடுக்கப்பட்ட கருத்துக்கள் மலைபோலக் குவிந்துகிடக்கின்றன.

தேடவேண்டியது கருத்துக்கள் அல்ல, செய்ய வேண்டியது செயல்படுவதற்கான முயற்சிகளே!

நடைமுறையை மாற்றிக்கொள்! உனக்குக் கொடுக்கப்படும் கருத்துக்களில் இலக்கண இலக்கியத்திலுள்ள போல நயம் இருக்காது.

உனது உள்ளத்தைத் தொட வேண்டும் என்பதே நோக்கம். உன்னை வேறு வழியில் ஈர்க்க முடியவில்லை.

உள்ளன்போடு உருக்கத்தோடு கடைப்பிடி!

## என் மூல மந்திரமே உனக்குப் பாதுகாப்பு:

“மகனே! அடைகாத்துக் குஞ்சு பொரித்த கோழியை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா?

அந்தக் கோழியானது அதன் குஞ்சுகளைத் தானியத்தைப் பொறுக்குவதற்காக அழைத்துச் செல்லும். ஆங்காங்கு குஞ்சுகள் இரையைக் கொத்திக் கொண்டிருக்கும். அந்த நேரத்தில் காக்கை, பருந்து போன்ற பறவைகள் வேகமாக பறந்து வந்தால் தனக்கு வரும் ஆபத்தை எண்ணி, அக்குஞ்சுகள் தன் தாயின் இறக்கைக்குள் ஓடிச் சென்று ஒளித்து கொள்கின்றன.

அதுபோல நீயும் எந்த நேரத்திலும் என் அருகிலேயே இருந்தாலும் மிகுந்த ஆபத்து வரும் காலங்களில் என்னுடைய இறக்கைக்குள் வந்து புகுந்துகொள்!

மூலமந்திரம் என்னும் எனது இறக்கைகள் உனக்கு, பாதுகாப்பு அளிக்கும்

## நவராத்திரி விழா நாட்களில்…

**“நவராத்திரி விழா நாட்களில் இரண்டு வேளை மட்டுமே உணவு உண்டு, அகண்ட ஜோதி தரிசனம் செய்ய வேண்டும்.”**

அன்னையின் அருள்வாக்கு


# Sydney - Mandrams - Upcoming Events – October 2016

## □□□ Homebush



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317

**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**
Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140



## நவராத்திரி அகண்ட தீபம் 2016

### கண்டம் நீக்கும் அகண்டம்

ஆன்மிககுரு அருள்திரு அடிகளார் அம்மா அவர்களின் ஆசியுடனும்
அன்னை ஆதிபராசக்தியின் திருவருளுடனும் ஒக்டோபர் மாதம் 08ஆம் திகதி சனிக்கிழமை
காலை 9.00 மணிக்கு ஹோம்புஸ் ஆண்கள் உயர் பாடசாலையில்
ஏற்றி வைக்கப்படும் அகண்டம் தொடர்ந்து ஒளி வீசி
அன்று மாலை 7.30 மணிக்கு குளிர வைக்கப்படும்.

**நிகழ்ச்சிகள்:**

**08.10.2016** – சனிக்கிழமை காலை 9.00 மணி
மங்கள வாத்திய இசையுடன் அகண்டம் ஏற்றல் நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் ஆகிய அனைத்து சக்திகளும்
காலை 9.00 மணிமுதல் மாலை 7.30 மணி வரை
அகண்டத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றுவர்.
அச்சமயம் தொடர்ந்து வழிபாட்டு மந்திரங்கள் ஓதப்படும்.

மாலை 7.30 மணிக்கு அகண்டம் குளிர வைக்கப்படும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

**“அகண்டத்திற்குக் கண்டத்தை நிவர்த்திக்கும் தன்மை உண்டு” – அன்னையின் அருள்வாக்கு**

அன்றையதினம் பக்தர்கள் அனைவரும் விழாவில் பங்கேற்று அகண்டத்தில் முக்கூட்டு எண்ணெய்
ஊற்றுவதன் மூலம் அவரவர் ஊழ்வினை தணிவதுடன் கிரகதோஷம், நோய்நொடி, முதலிய
இடையூறுகள் நீங்கப்பெற்று
கல்வி, திருமணம், மக்கட்பேறு, மன அமைதி ஆகிய நற்பேறுகளையும்
அருள்திரு அடிகளார் அவர்களின் குருவருளையும்,
அன்னை ஆதிபராசக்தியின் திருவருளையும் பெற்றேகுமாறு
சிட்னி மன்றத்தினர் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அன்றையதினம் நண்பகலும் இரவும் அன்னதானம் இடம்பெறும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

சிட்னி மன்றத்தினர்: 0416217317 அல்லது 0497995779

அகண்டத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி
ஜோதியை தரிசித்து நம் ஊழ்வினைகளைக் களைவோமாக!

| | | | |
|---|---|---|---|
| 07.10.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.10.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.10.2016 | SUNDAY - ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 21.10.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.10.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## மகாலட்சுமியடா அவள்! பார்வைதான் இல்லை! ஊழ்வினை!

மதுராந்தகம் வட்டத்தில் ஒரு பெரிய ஜமீன் குடும்பம். அந்தக் குடும்பத்தில் வயதான பெண்மணி. அவருக்குக் கண் பார்வை இல்லை. இரக்க சுபாவம் கொண்டவர். தெய்வ பக்தி நிறைந்தவர். பார்வை இல்லாவிட்டாலும் ஜமீன் காரியங்களை நிர்வாகம் செய்யும் சக்தி படைத்தவர்.

வீட்டிற்கு விருந்தாளிகள் வந்துவிட்டால் ஒரு ஓரத்தில் நாற்காலி போட்டுக்கொண்டு சமையற்காரர்களையும், வேலையாட்களையும் வைத்துக்கொண்டு சாப்பாடு பரிமாறச் சொல்வார். ஒவ்வொருவரின் காலடி ஓசைகளையும் துல்லியமாக அளந்து வைத்திருப்பவர்.
அந்தக் குடும்பத்தில் ஒரு பிரச்சனை! அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க அந்தக் குடும்பத்தார் வந்தார்கள்.

அப்போது அந்தப் பெண்மணியைப் பற்றி அம்மா அருள்வாக்கில் சொன்னாளாம்.

"மகாலட்சுமியடா அவள்! பாவம்! பார்வைதான் இல்லை! ஊழ்வினை!" என்றாளாம்.

பரம்பொருளான ஆதிபராசக்தியின் வாயாலேயே மகாலட்சுமி என்று சொல்லப்பட்ட ஆன்மா அது! அப்படியிருந்தும் அவருக்குப் பார்வையில்லை காரணம் ஊழ்வினை!.

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2016 - ஸ்ரீ துர்முகி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| புரட்டாசி | 15 | 01.10.2016 | சனி | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| புரட்டாசி | 30 | 16.10.2016 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 14 | 30.10.2016 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| ஐப்பசி | 29 | 14.11.2016 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 14 | 29.11.2016 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 28 | 13.12.2016 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2016 | ஞாயிறு | **கிறிஸ்மஸ்** |
| மார்கழி | 13 | 28.12.2016 | புதன் | **அமாவாசை - வேள்வி** |

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னைக்கு

## நவராத்திரி கால அபிடேக, சிறப்பு அலங்காரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 30.09.2016 | வெள்ளி | அபிடேகம் | தங்கக்கவசம் சிறப்பு அலங்காரம் | |
| 01.10.2016 | சனி | அபிடேகம் | சிறப்பு அலங்காரம் | சந்தனக்காப்பு |
| 02.10.2016 | ஞாயிறு | அபிடேகம் | சிறப்பு அலங்காரம் | குங்குமக்காப்பு |
| 03.10.2016 | திங்கள் | அபிடேகம் | சிறப்பு அலங்காரம் | விபூதிக்காப்பு |
| 04.10.2016 | செவ்வாய் | அபிடேகம் | சிறப்பு அலங்காரம் | வேப்பிலைக் காப்பு |
| 05.10.2016 | புதன் | அபிடேகம் | சிறப்பு அலங்காரம் | கற்கண்டு காப்பு |
| 06.10.2016 | வியாழன் | அபிடேகம் | சிறப்பு அலங்காரம் | நவதானியக் காப்பு |
| 07.10.2016 | வெள்ளி | அபிடேகம் | சிறப்பு அலங்காரம் | மஞ்சள் காப்பு |
| 08.10.2016 | சனி | அபிடேகம் | சிறப்பு அலங்காரம் | துளசிக்காப்பு |
| 09.10.2016 | ஞாயிறு | அபிடேகம் | சிறப்பு அலங்காரம் | சிறுதானியக்காப்பு |
| 10.10.2016 | திங்கள் | அபிடேகம் | சரஸ்வதி - முத்து அலங்காரம் | வாசனைத்திரவிய காப்பு |
| 11.10.2016 | செவ்வாய் | அபிடேகம் | மகிடாசுரமர்த்தினி | மாவிளக்கு காப்பு |

**01.10.2016 முதல் 11.10.2016 வரை குங்கும இலட்சார்ச்சனை நடைபெறும்.**

# Sydney - Mandrams - Upcoming Events – October 2016



**Melmaruvathur Swayambu Arulmihu
Annai Athiparasakthi Sitherpeedam NSW
Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead



குருவடி சரணம்!! திருவடிசரணம்!

ஓம்சக்தி

**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
நியூ சவுத் வேல்ஸ் (அவுஸ்திரேலியா) மன்றத்தினரால்
நடாத்தப்படும்**

## நவராத்திரி அகண்ட தீப விழா

**Date:** 08/10/2016 (Saturday)
**Time:** 10:00 AM to 8:00 PM
**Venue:** 1st Toongabbie Scout Hall
99 Bungaree Road
Toongabbie 2145

"நவராத்திரி அகண்டத்திற்கு கண்டத்தை நிவர்த்திக்கும் தன்மை உண்டு" என்பது அன்னையின் அருள்வாக்கு

முக்கூட்டு எண்ணெய் என்பது ஆணவம் கன்மம் மாயை என்பதை குறிக்கும் மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் தற்போது நடைபெற்றுகொண்டிருக்கும் நவராத்திரி அகண்டதீபவிழாவில் அருள்மிகு அடிகளார் அம்மா அவர்களால் ஏற்றப்பட்ட அகண்ட தீபத்தில் இருந்து தருவிக்கப்பட்ட முக்கூட்டு எண்ணெய்உடன் விழா ஆரம்பமாகும்.

நவராத்திரியில் ஒளி விசிக் கொண்டிருக்கும் அகண்டத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றுவதன் மூலம் அவரவர்கள் ஊழ்வினை தணிவதுடன். நோய் நொடி முதலிய இடையூறுகள் நீங்கப்பெற்று அன்னையின் திருவருளையும். அருள்திரு அடிகளார் அவர்களின் குருவருளையும் பெற்றேகுமாறு

நியூ சவுத் வேல்ஸ்(அவுஸ்திரேலியா) மண்றத்தினர்
அன்புடன் வேண்டுகின்றனர்.
அன்று மதியமும் இரவும் அன்னதானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0427 020 638 OR 0468 417 149 www.omsakthiaustralia.org.au
Email:- info@omsakthiaustralia.org.au

ஓம் சக்தி

உலகெல்லாம் சக்தி நெறி ஓங்கவேண்டும் ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்க வேண்டும்!

| | | | |
|---|---|---|---|
| 07.10.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.10.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.10.2016 | SUNDAY - ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>"பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 21.10.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.10.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

# Melbourne - Mandrams – Upcoming Events – October 2016

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram

## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

## கூட்டு வழிபாடுகள்:

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 02.10.2016 | Sunday | புரட்டாதி | 16 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 07.10.2016 | Friday | புரட்டாதி | 21 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** - 7.30p.m. – 9.00p.m. |




| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 14.10.2016 | Friday | புரட்டாதி | 28 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 16.10.2016 | Sunday | புரட்டாதி | 30 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 21.10.2016 | Friday | ஐப்பசி | 05 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** - 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 23.10.2016 | Sunday | ஐப்பசி | 07 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 28.10.2016 | Friday | ஐப்பசி | 12 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 30.10.2016 | Sunday | ஐப்பசி | 30 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |

**30.10.2016 – ஞாயிறு - அமாவாசை, 16.10.2016 – ஞாயிறு - பௌர்ணமி**

# Melbourne - Mandrams – Upcoming Events – October 2016

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
**www.supremesakthi.com**

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| 09.10.2016 | Sunday | 9.00am | Joint Prayer |
| 16.10.2016 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"Thiru Vilakku Pooja"<br>"திருவிளக்குப் பூஜை" |

## "வேள்விப்பூசை, வழிபாடு"

## அன்னையின் அருள்வாக்கு

### கடற்கரையில் ஏன் வேள்வி?

"கலச விளக்கு வேள்விப் பூசைகளை எப்போது யார் செய்தாலும் மழை வரும் என்று நினைத்துக்கொள்ளக்கூடாது. அடிகளார் அனுமதியுடனும், பக்தியுடனும் நான் அருளிய வழிமுறைகளுடனும், முறைப்படியும் செய்தால்தான் பலன் கிடைக்கும். வேள்விப்பூசைகளை வியாபாரமாக ஆக்கக்கூடாது."

### வழிபாட்டில் ஏற்றத்தாழ்வு

"இடக்கை, வலக்கை என்ற இந்த இரண்டும் சேர்ந்து வணங்கும்போது சமமாக ஆகிவிடுகிறது. ஒரு கை செய்யும் வேலையை இன்னொரு கை செய்ய முடியாது. ஆனால், வணங்குகிறபோது மட்டும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் இணைகின்றன. அதுபோல இறைவழிபாட்டில் ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்வு பார்க்கக்கூடாது. வணங்குகிறபோது உங்கள் இரு கைகளும் இணைவது போலவே வழிபாட்டிலும் உங்கள் ஐம்புலன்களும் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும்."

***

## நவராத்திரி அகண்டம்

"நவராத்திரி அகண்டத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி முகர்வது மூன்று சிக்கல்கள் தீர்வதற்கு.

வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கு எண்ணெய் ஆகியவற்றிற்கு மகத்துவம் உண்டு."

அன்னையின் அருள்வாக்கு

# "ஒரு வீடு வாங்கு"

வேலூரைச் சேர்ந்த தொண்டர் ஒருவர். அவரிடம் அருள்திரு அடிகளார் "நீ ஒரு வீடு வாங்கு"என்றார். வீடு வாங்குகிற அளவுக்கு எனக்குப் பணம் இல்லையேம்மா.. என்றார் அவர். எவ்வளவு காலம்தான் நீ வாடகை வீட்டில் இருப்பாய்? உடனே வீடு வாங்கு. உன் தெருவிலேயே இந்த எண் கொண்ட வீடு விலைக்கு வரப்போகிறது. போய் விசாரி.. என்று கூறினார் அடிகளார்.

அவ்வாறு அந்தத் தொண்டர் விசாரித்தபோது அதிகமான விலை சொன்னார், வீட்டுக்காரர்.

திரும்பி வந்து அடிகளாரிடம் "அம்மா அந்த வீட்டுக்காரன் அதிகமான விலை சொல்கிறான். அவ்வளவு பணம் புரட்ட என்னால் முடியாது" என்றார் தொண்டர்.

"இல்லை, இல்லை. அப்படிச் சொல்லாதே, மறுபடியும் அவன் வீட்டுக்குக் போ! அவன் வீட்டில் என்னைப்போல ஒரு சித்தன் படம் மாட்டியிருக்கும். அந்தக் கூடத்தில் உட்கார். மீண்டும் விலை பேசு! குறைத்துக்கேள்! ஒப்புக்கொள்வான்!" எனச் சொல்லி அடிகளார் அனுப்பினார்.

அவ்வாறே அந்தத் தொண்டர் மீண்டும் அந்த வீட்டு உரிமையாளர் வீடு தேடிப் போனார்.

அடிகளார் சொல்லி அனுப்பியபடி அவர் வீட்டுக் கூடத்தில் பூண்டி மகானின் பெரிய படம் ஒன்று இருந்தது. அவரைப் பார்த்த அந்த அன்பர், வாங்க! வாங்க! உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன். நீங்கள் மருவத்தூர் ஆதிபராசக்தி இயக்கத்தைச் சேர்ந்தவர்களாம். அப்புறம்தான் கேள்விப்பட்டேன். நான் பூண்டி சாமியார் பக்தன் என்றார்.

**வேம்பு**

பிறகு வீடு விற்பனை சம்பந்தமாக பேரம் பேசப்பட்டது. தொண்டர் சொன்ன விலைக்கு விற்கச் சம்மதித்தார் அந்த அன்பர். விலை பேசி முடித்து வாங்கிய பிறகு அடிகளாரிடம் வந்தார் தொண்டர்.

"அம்மா! உங்க தயவால் வீடு வாங்கிவிட்டேன். அம்மா சொல்லியபடி எல்லாம் நல்லபடியாக முடிந்தது. அம்மாவிற்கு நன்றி சொல்லிவிட்டுப் போக வந்தேன்"என்றார்.

"அந்த வீடு உனக்கு ராசியான வீடாக அமையும். வீட்டை விட்டு வெளியே வந்ததும் எதிரே ஒரு கோயில் கோபுரம் தெரிகிறது பார்த்தாயா? தினம் கோபுர தரிசனம் செய்கிற பாக்கியம் உனக்குக் கிடைக்கும். அதனால்தான் அந்த வீட்டை விட்டுவிடாமல் வாங்கிப்போடு! என்றேன்"என்றார்அடிகளார்.

இதில் ஒரு வியப்பான செய்தி என்ன என்றால், அந்த வீட்டு உரிமையாளர் வீட்டுக்கு அடிகளார் சென்றதே கிடையாது. அப்படி இருக்க அந்த வீட்டுக்கூடத்தில் பூண்டி மகான் படம் இருப்பதை அறிந்து சொல்லியதும், அவன் இன்ன விலை சொல்வான், நீ இன்ன விலைக்குக் கேட்டு முடித்துக்கொள் என்று சொல்லியதும் வியப்பான சம்பவங்கள் ஆகும்.

## அழுதால் கிடைக்கும்:

**"குழந்தை அழுதால் பசி ஆறுகிறது. கன்று அழுதால் பால் குடிக்கிறது. இயற்கை அழுதால் வளம் கிடைக்கிறது. அதுபோலத் தெய்வத்திடம் நீ அழுவதால் அதற்குரிய நல்ல பலன்கள் உனக்குக்கிடைக்கின்றன."**

அன்னையின் அருள்வாக்கு

# Divine Miracles at Melmaruvathur

## Your wife and child will suffer for their karma:

In 1984 Revathi and Chathurthivel went to Mother for the first time. Mother told him, “Son, take neem leaves and cow’s milk every day. I shall see that you have a job. Your wife and child will have ill health on account of their past Karma.” Within a month Vel got a job in a bus company as promised by Mother. He was also given the responsibility of running the weekly worship centre. Although he did not know why he was asked to eat neem leaves, he did as commanded by Her. Even from the age of fifteen he was plagued by asthma. His job required him to travel constantly in heat and dust and this would have further aggravated his asthma. Only then did he understand the importance of Mother’s medicine. His faith and devotion increased.

As predicted by Mother, Revathi was afflicted by a boil inside her mouth making it difficult for her to eat or speak. Medication would cause the boil to burst and pus would come out. Two teeth had to be extracted. When she wore the Sakthi malai and carried the irumudi the boil disappeared totally. She then developed boils on her body. She put up with the problem bravely. In 1990 during divine revelation she was asked to avoid tamarind, salt and chilli and partake goat’s milk. This cured her completely. The couple had twins. One of them developed breathing trouble. The other had fits of unconsciousness and vomiting. They had to undergo treatment for years. The couple decided to be patient because one had to do retribution for one’s Kaarma. When they visited Mother She told them simple remedies for the children, which they gave faithfully and the children became well.

They had been asked to vacate their rented house. Mother told them that they should register themselves at number 111 on Adi Pooram day and participate in the yagna. They were asked to take the holy ash in a piece of cloth and hang it in front of their house. Revathi told mother that they wanted a house, when asked what she wanted. Mother told her that She had given the instruction about the holy ash only for that purpose! They did as they were told. Then they paid two months advance and enterd a new house with due ceremony.Behind his sister’s house there was a piece of land measuring 625 square feet. Revathi’s family bought the land and registered it in the name of Vel. He also built a house and started living there. In the neighbourhood people were constantly quarrelling and disturbing the peace. He decided to make them turn to spirituality. He told them about Mother and made twenty of them carry the irumudi, wear the Sakthi malai and travel to Melmaruvathur at his expence. After that the people of the locality started prospering and lived peacefully. They also started going to Mother on their own, with their problems and finding solutions to them.

Sakthi Revathi said, “We don’t have even small savings. But we have been living comfortably like wealthy persons. This has been possible because of Mother’s immense grace!”

## நவராத்திரி

“நவராத்திரி விழா நாட்களில் இரண்டு வேளை மட்டுமே உணவு உண்டு, அகண்ட ஜோதி தரிசனம் செய்ய வேண்டும்.”

“நவராத்திரி விழா என்பதும் ஜோதி தரிசனம் என்ற தத்துவம் கொண்டது தான்.
நான்கு பேர் சேர்ந்து செய்யும் தொண்டு, நான்கு பேர் சேர்ந்து செய்யும் அர்ச்சனை என்ற கூட்டு முயற்சி கொண்டதுதான்.”

**அன்னையின் அருள்வாக்கு**

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**புரட்டாதி – அமாவாசை–பௌர்ணமி :**

பசுக்கள் விருத்தி உண்டாகும்.

கால்நடைச் செல்வம் பெருகி நிறைந்த பால் வளப்பெருக்கம் உண்டாகும்.

**ஐப்பசி – அமாவாசை–பௌர்ணமி :**

பசிப்பிணி நீங்கும்.
பசிப்பிணி அகலுகின்ற விதத்தில் நிறைந்த வளம் உண்டாகும்.

## அன்னையின் அருள்வாக்கு

- **எனக்கு உருவம் கிடையாது. என்னுடைய தோற்றங்கள் அணு! சோதி! குழந்தை! பாம்பு! விளக்கு! சித்தர்! முதலியன ஆகும்.**
- **தீப வழிபாட்டால் இருள் நீங்குவதுபோல, இயற்கை வழிபாட்டால் மன இருள் நீங்கும். இன்னல்கள் நீங்கும்.**
- **நவராத்திரி விழாவின்போது மௌனத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.**

**அன்னையின் அருள்வாக்கு**

## ந வ ரா த் தி ரி

**"நவராத்திரி நவக்கிரகங்களுக்கு உகந்தது. நவராத்திரி அகண்ட விளக்கிற்கு எண்ணெய் ஊற்றினால் மட்டும் போதாது. உன் உள்ளம் ஒளிபெற உள்ளத்திற்கு எண்ணெய் ஊற்ற வேண்டும்."**

- அன்னையின் அருள்வாக்கு

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

<u>தனி இதழ்</u>

ரூபா ₹ 15.00

<u>ஆண்டுச்சந்தா</u>

ரூபா ₹ 180.00 (இந்தியா)

<u>ஆயுள் சந்தா</u>

ரூபா ₹ 2600.00 (இந்தியா)

**<u>வெளிநாட்டுச் சந்தா</u>**

இந்திய ரூபா ₹ 3500.00
(இரண்டு ஆண்டுகள்)

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address:

Editor, 'Sakthi Oli' Office,
Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,
Tamil Nadu, South India.

**சக்தி ஒளி சந்தாதாரர்களுக்கு!**

சந்தா புதுப்பித்தல் மற்றும் விலாச மாற்றத்திற்கு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்குக் கடிதம் மூலம் அல்லது 044-27529900 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்புகொள்ள முடியும்.

நேரடியாக இணையத்தளத்தினூடாகவும் ஆன்லைனில் புதுப்பித்தல், புதிய சந்தாக்களை மற்றும் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

**www.sakthioli.com**

## Melbourne - Mandrams – Upcoming Events – October 2016



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

## நவராத்திரி அகண்ட தீபம் ஏற்றலும் தரிசனமும்

**Glen Weverley Scout Hall,**
Whites Lane – Glen Waverley 3150 – (Mel.Ref.: 71 D 7)

நவராத்திரி 11 நாட்களும் சிறப்பு அலங்காரங்களுடன் குங்கும இலட்சார்ச்சனை, நவராத்திரி சிறப்பு நிகழ்ச்சிகளுடன் வழிபாடுகளும் இடம்பெறும்.

| | | | |
|---|---|---|---|
| 01.10.2015 | சனி | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 1ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 02.10.2015 | ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 2ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 03.10.2015 | திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 3ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 04.10.2015 | செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 4ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 05.10.2015 | புதன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 5ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 06.10.2015 | வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 6ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 07.10.2015 | வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | "அகண்டம் தீபம் ஏற்றல்"<br>நவராத்திரி 7ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 08.10.2015 | சனி | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 8ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 09.10.2014 | ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | "அகண்டம் தீபம் குளிர்வித்தல்"<br>நவராத்திரி 09ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 10.10.2016 | திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 10ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 11.10.2016 | செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | விஜயதசமி<br>நவராத்திரி 11ஆம் நாள் கூட்டு வழிபாடு |

| | | | |
|---|---|---|---|
| 14.10.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.10.2016 | SUNDAY - ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>"பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 21.10.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.10.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Lalor

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)

May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 03.10.2016 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.10.2016 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.10.2016 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு

அன்னைக்கு அபிடேகம் செய்துவிட்டோம், குரு பிரானுக்குப் பாதபூசை செய்துவிட்டோம், நம் பிரச்சினைகளை அன்னை பார்த்துக்கொள்வாள் என்று கூறி, அன்னையின் பக்தர்கள் சிலர் அசட்டையாக இருந்து வருகிறார்கள். அது மட்டுமின்றி அவர்கள் பக்தியிலும் தொய்வு ஏற்பட்டு, சித்தர் பீடம் செல்வதையும் குறைத்துக்கொள்கிறார்கள். இவர்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன அம்மா?

**அம்மாவும் அருள்வாக்கில் “அபிஷேக, ஆராதனை செய்து விட்டோம், ஆடிப்பூரத்திற்குப் பால் ஊற்றி விட்டோம்., கஞ்சி ஊற்றி விட்டோம், தைப்பூசத்திற்கு இத்தனை இருமுடி செலுத்திவிட்டோம்”என்று இருக்கக்கூடாது. தொடர்ந்து ஆன்மிகத்தில் ஈடுபாடு வேண்டும் என்றுதான் கூறுகிறார்கள். ‘தொண்டு செய், அதைத் தொடர்ந்துசெய்’என்றும் கூறுகிறார்கள். நாள் ஆக, ஆக பக்தி செலுத்துவதில் தொய்வு ஏற்படும்போது மன உறுதியோடு இருக்க வேண்டும். நாடி வந்தது கிடைக்காத போது சிலர் வேறு இடத்தை நாடிச் செல்கிறார்கள். மனித மனமாயிற்றே! தாவத்தான் செய்யும். எங்கு சென்றாலும் நம் நிழல் நம்மைத் தொடரும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அம்மா யாரையும் ‘வா’என்றும் சொல்வதில்லை. ‘போ’என்றும் சொல்வதில்லை. அவர்களாகவே வருகிறார்கள், அவர்களாகவே போகிறார்கள். மற்றவர்களுக்காகக் கவலைப்பட்டு அறிவுரை கூறுவதை விட்டுவிட்டு நாம் முதலில் ஒழுங்காக இருப்போமே?.**

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



## பஞ்சபூதங்கள்

“இங்கே பஞ்சபூதங்கள் என்ற ஐந்து பூதங்களும் வேலை செய்யாவிட்டால் எந்த வேலையும் நடக்காது. அந்த பஞ்சபூதங்களைக் கண்டறியக் கண்ணாடியெல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்த லென்சுக்கே பூதக் கண்ணாடி என்று பெயர்.”

இந்தப் பஞ்சபூதங்களிலும் சூடு உண்டு! குளிர்ச்சி உண்டு!”

## ஒரே தாய்! ஒரே குலம்!

“இங்கே எல்லோருடைய உருவமும் ஒன்றாக இருந்தாலும் உள்ளம் வேறாக இருக்கிறது. மொழிகள் வேறாக உள்ளன. நம் உள்ளத்தால் ஒன்றாக முடியும்.

குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்ற சைகை! வயிறு பசிக்கிறது என்ற சைகைகளை எல்லா மொழிக்காரர்களும் புரிந்து கொள்ள முடியும் அல்லவா!

எல்லா நாட்டு மனிதர்களும் உணர்வால், சைகையால் ஒன்றுபடுகிறார்கள் அல்லவா? அதனால் தான் அம்மா ஒரே தாய்! ஒரே குலம்! என்கிறது!”

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01.10.2016 | சனி | புரட்டாதி | 15 | சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்<br>புரட்டாசி சனி விரதம் - 3ஆம் வாரம் |
| 05.10.2016 | புதன் | புரட்டாதி | 19 | சதுர்த்தி விரதம்<br>வடலூர் வள்ளலார் பிறந்த நாள் |
| 07.10.2016 | வெள்ளி | புரட்டாதி | 21 | ஷஷ்டி விரதம் |
| 08.10.2016 | சனி | புரட்டாதி | 22 | புரட்டாசி சனி விரதம் - 4ஆம் வாரம்<br>சரஸ்வதி பூஜாரம்பம் |
| 10.10.2016 | திங்கள் | புரட்டாதி | 24 | மஹாநவமி, சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை |
| 11.10.2016 | செவ்வாய் | புரட்டாதி | 25 | விஜயதசமி, கேதாரகௌரி விரதாரம்பம் |
| 12.10.2016 | புதன் | புரட்டாதி | 26 | ஏகாதசி விரதம் |
| 14.10.2016 | வெள்ளி | புரட்டாதி | 28 | பிரதோச விரதம் |
| 15.10.2016 | சனி | புரட்டாதி | 29 | புரட்டாசி சனி விரதம் - 5ஆம் வாரம் |
| 16.10.2016 | ஞாயிறு | புரட்டாதி | 30 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 18.10.2016 | செவ்வாய் | ஐப்பசி | 02 | கார்த்திகை விரதம் |
| 19.10.2016 | புதன் | ஐப்பசி | 03 | சங்கடஹர சதுர்த்தி |
| 26.10.2016 | புதன் | ஐப்பசி | 10 | ஏகாதசி விரதம் |
| 28.10.2016 | வெள்ளி | ஐப்பசி | 12 | பிரதோச விரதம் |
| 29.10.2016 | சனி | ஐப்பசி | 13 | தீபாவளிப் பண்டிகை |
| 30.10.2016 | ஞாயிறு | ஐப்பசி | 14 | அமாவாசை விரதம் - கேதார கௌரி விரத நிறைவு |
| 31.10.2016 | திங்கள் | ஐப்பசி | 15 | ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம் |
| 05.11.2016 | சனி | ஐப்பசி | 20 | ஸ்கந்த ஷஷ்டி விரதம் - சூரன் போர் |
| 16.11.2016 | புதன் | கார்த்திகை | 01 | ஐயப்பன் படிப்பூசை ஆரம்பம் (60 நாட்கள்) |

## மூன்று வினைகளைத் தீர்க்கும் முக்கூட்டு எண்ணெய்

**அ**கண்டத்திலிருந்து பெறப்படும் முக்கூட்டு எண்ணெய் மூன்று வினைகளை நீக்கும். அகண்டத்திலுள்ள அந்த சுடர் ஒளியானது திரி வழியாக அகண்டத்திலுள்ள எண்ணெய்க்குச் செல்வதால் அந்த முக்கூட்டு எண்ணெய்க்கு உடல் நோய்களையும், உள்ளத்து நோய்களையும், முற்பிறவி வினைகளையும் நீக்கும் ஆற்றல் உண்டு. இந்த முக்கூட்டு எண்ணெயை பெற்றுச்சென்று பயன்பெற்றவர்கள் பல்லாயிரக்கணக்கானோர்.

ஒன்பது வாசல் கொண்ட நமது உடம்பு. அண்டத்திலுள்ளது பிண்டத்தில் உள்ளது. என்பார்கள்.
ஒன்பதின் சிறப்பு : நவமணிகள் - நவகோள்கள் - நவராத்திரி – நவதானியங்கள்….

முக்கூட்டு எண்ணெயை பெற்றுச்சென்று இல்லங்களில் ஒன்பது இடங்களில் முக்கூட்டு எண்ணெய் சேர்த்து தீபமேற்றி வழிபடுங்கள் என்று அம்மா அருள்வாக்கில் பல வருடங்களுக்கு முன்னர் அருளியுள்ளார்கள்.

நவராத்திரி அகண்ட விளக்கு எண்ணெயை எடுத்துச் சென்று அதில் முக்கூட்டு எண்ணெய் சேர்த்து உங்கள் வீட்டில் **ஒன்பது இடங்களில்** விளக்கேற்றி வைக்க வேண்டும்.

முன்வாசல், பின்வாசல், பூசையறை, சமையலறை, பணம் வைக்கும் இடம், முதலிய முக்கியமான **ஒன்பது இடங்களில்** விளக்கேற்றி வைக்க வேண்டும்.